ஸ்ரீ
சிவமயம்

gistered as a News paper in Ceylon
P. M. G. NO. H. A 19/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்வ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஹ ஐப்பசிமீ கந௨ (1946 அக்டோபர் 29 செவ்வாய்க்கிழமை) [இல. ருஎ

# சீர் கெட்ட வாழ்வு!

## இந்த நாட்டின் உணவுநிலை

(ஸ்ரீதரன்)

எங்கள் இலங்கை நாட்டிலே விளைவிக்கப்படுகிற அரிசி எல்லாம் எங்கே? இதனை அதிகாரிகள் வாங்கி என்ன செய்கிறார்கள்? அவற்றை வேறு நாடுகளுக்கு அனுப்புகிறார்களா? அல்லது இராணுவத்தினர்க்குக் கொடுக்கின்றனரா? என்று இன்னோரன்ன ஆட்சேபனைகளைச் சில சமையங்களில் ஊரவர்கள் கிளப்புகிறார்கள்.

இந்த ஆட்சேபனைக்குப் பதிலளிக்கும் முகத்தால் உணவுப் பங்கீட்டு அதிகாரியான மிஸ்ரர் ஆர். எஸ். வீ. பூலியர் என்பவர் பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கையை இப்போது விடுத்திருக்கிறார். இலங்கையில் விளையும் நெல் வாங்குந் திட்டத்தின்படி சேகரிக்கப்படும் அரிசி, ஒரு கிழமையில் ஒரு நாளுக்குத்தான் பங்கீடுசெய்யப் போதுமான தன்றி தினந்தோறும் பங்கீடு செய்யப் போதியதன்று. இவ்வளவு அரிசிதான் விளைவிக்கப்படுகிறது. விளையும் அரிசியை இலங்கைமக்களுக்கு நாம் பங்கீடுசெய்கிறோமேயன்றிவேறெவருக்கும் கொடுக்கவில்லை என்று மிஸ்ரர் பூலியர் தெரிவிக்கிறார்

சுருங்கக்கூறுங்கால்கோடிக்கணக்கான ரூபாப்களைச் சென்ற 15 ஆண்டு காலமாக மிஸ்ரர் சேனநாயக்கா வாரிவாரி இறைத்தும், இன்னும் இலங்கை மக்கள் முன்னிருந்த நிலைமையிலேயே இருக்கிறார்கள் ஒரு ஆண்டில் 52 நாட்களுக்குத்தான இங்கு விளையும் நெல் எமக்கு — அதுவும் கால் வயிற்றுக்குப் — போதுமாம்! இந்த வெட்கம்கெட்ட நிலைமையை வெளிதிறந்து கூறும் அதிகாரிகள் மனப்பான்மையையென்னென்றுகூறுவது!

இந்தக் கேவல நிலைமைக்குக் காரணம் என்ன? இந்நாட்டில் எங்கு பார்த்தாலும், 'கள்ளமார்க்கெட்டில்' வேண்டிய நெல் விலைக்கு இருக்கிறது. இது வானத்திலிருந்து வரவில்லை. இங்கேதான் விளைவிக்கப்படுகிறது. ஆனால் இப் பெருந்தொகையான நெல் அரசாங்கக் கழஞ்சியத்துக்குப் போவதில்லை. மிஸ்ரர் சேனநாயக்காவும் அவருடைய அதிகாரிகளும் எத்தகைய கடும் கட்டுப்பாட்டுக்களை இயற்றியபோதிலும் 'கள்ள மார்க்கெட்டுக்கு' நெல் போய்க்கொண்டுதான் இருக்கிறது. இதனைக் கெடுக்க வேண்டும். விவசாயிகளின் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் அதிகாரிகள் பெறுதல்வேண்டும். இன்று இந்த இலங்கையிலே, விவசாயிகளின் முதற் சத்துரு சேனநாயக்காதான்! ஒரு புசல் நெல்லுக்கு 6 ரூபா என்று விதித்து அவர்களை மிஸ்ரர் சேனநாயக்கா கெடுக்க முனைந்துவிட்டார். இவருடைய வலையினின்றும் தப்புவதற்காகவே, விவசாயிகள் தங்கள் நெல்லை 'கள்ள மார்க்கெட்டுக்கு' அனுப்புகின்றனர்.

மிஸ்ரர் சேனநாயக்கா தனது கொள்கையை மாற்றவேண்டும். ஆனால் அவர்க்கு அப்படியான நல்ல மனப்பான்மை எள்ளளவும் இல்லை. எனவே, அவரைப் பதவியினின்றும் நீக்கி, உணவுப் பொருள் விஷயத்தில் தற்பாதுகாப்புடன் இருக்கத்தக்க மார்க்கங்களைத் தேடக்கூடிய புதிய அரசியலை நாம் சிருஷ்டி செய்ய வேண்டும்.

# ஜென்ம சத்துரு!

## இலங்கை வாழ்வில் சேனநாயக்கா!

இந்த இலங்கைவள நாட்டிற்குச் சத்துருவாக யாரும் இருப்பரேயானால் அவர் சேனநாயக்காதான், இந்தத் தீவின் முதற் பகைவன் அவர்தான் என்று சென்றவாரம் அகில இலங்கைப் பௌத்த குருமார் மகாநாட்டின் ஆதரவில், கொழும்பு "கால் பேஸ்" மைதானத்தில் நிகழ்ந்த ஓர் பெரிய கூட்டத்தில் ஸ்ரீ ராகுல என்னும் பௌத்தகுரு கூறினார்.

இக்கூட்டத்துக்கு 15000 பேருக்குமேல் சமுகமளித்தனர். பல பௌத்த குருமார் தலைமை தாங்க, ஓர்பிரமாண்டமான ஊர்வலம் கொழும்பு நகரத்தின் பலவீதிகளாலும் சென்று ஈற்றில் கால்பேஸ் மைதானத்தையடைந்தது.

ஸ்ரீ ராகுல தம் பிரசாரணத்தில் மேலும் குறிப்பிட்டதாவது: "இந்த நாட்டிற்கு மிஸ்ரர் சேனநாயக்கா, அதிகாரத்துக்கு வந்த காலம் தொடக்கம் இற்றைவரை அவரும் அவருடைய கோஷ்டியினரும் செய்துவரும் இன்னல்களோ சொல்லும்தரமல்ல. இப்படிப்பட்ட மிஸ்ரர் சேனநாயக்காவுக்குக் கதிமோட்சம் கொடுக்க புத்தபெருமானாலும் முடியாது."

தொழிலாளரை வேலைக்குத் திரும்பும்படி மிஸ்ரர் கொத்தலாவலை வானொலிமூலமாகக் கூறியதையும் ஸ்ரீ ராகுல கண்டித்தார்.

ஸ்ரீ சிவாலி தீரோ என்னும் இன்னோர் பௌத்த குரு பின் வருமாறு கூறினார்:

"தொழிலாளராயுள்ளார் அரசியல் விஷயங்களிற் பிரவேசிக்க வொண்ணாது என்று அதிகார வர்க்கம் கூறுகிறது. ஓர் நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள் தொழிலாளர்தான் ஆகவே, அவர்கள் அரசியல் விஷயங்களைப் பேசாவிட்டால், வேறுயார் பேசுவது என்பது தெரியவில்லை. சோல்பெரித் திட்டம் இந்நாட்டு மக்களை அடிமைக் குழியில் தள்ளுவதாகும். அதனை நிராகரிக்க, தொழிலாளர்களுக்கு ஏன் உரிமையில்லை? அரசியல் விஷயங்களுக்கும் பொருளாதார விஷயங்களுக்கு மிடையிற் பெருந் தொடர்பு உண்டு. எனவே இந்நாட்டு மக்களின் பொருளாதார நிலைமை திருந்தவேண்டுமாயின், அரசியல் நிலைமை சீர்ப்படவேண்டும்."

கூட்டத்தில் பிரபல நியாயவாதி ஸ்ரீ நிசங்க, [illegible] லியோர் பேசினர்.

# கற்பனை கடந்த சோதி

(பண்டிதர் இ. திருநாவுக்கரசு
சைவப்பிரகாச வித்தியாசாலை, இணுவில்)

### சிந்தனை

செந்தமிழ்ப் புலவர் தம் உள்ளத்தெழுகின்ற உணர்ச்சிப் பிரவாகம் வரமபுபடுத்திக் கூறக்கூடியதன்று, நூலொடு நுனித்து நுண்பொருள் காணவல்ல சிந்தனையை வரம்பு படுத்தி ஓரளவிற் கூறமுடியும். அச்சிந்தனையளவினை நாங்கள் கற்ற "நூலளவேயாகுமாந் நுண்ணறிவு" என்பதில் அறிவின் தரத்தினை நூலொடு சார்த்திக் கூறப்படுதல் கொண்டு அறியலாம். எவ்வகையான நூற்றொகுதியை எவ்வளவினதாக ஒருவர் கற்றாரென அறிந்தால் அவர் அறிவு நிலையை மட்டிட முடியும். அந்த அடிப்படைக் கொள்கையாலேயே தராதரப் பத்திரங் கொண்டு இந்நாளில் தகுதி பார்க்கும் வழக்கம் நடைமுறையில் வருகிறது. அந்நூல்களின் பெருமைக்குத் தக அவற்றைக் கற்ற ஒருவரது விவேகத்தையும் திட்டமாகக் கூறுதல் சாலும். பூத பௌதிக சாஸ்திர ஞானிகள் புதிய விதிகள் கண்டு பிரமாணமாக வரைந்து உலகுக்கு அளித்துவருகின்றனர் அதுபோலவே சூக்குமமாகிய ஆன்ம ஞானத்தைப்பற்றி முன்னேயளந்து பிரமாணங்கூறிய தமிழ் வல்லார் அனேகர் இருந்து வந்தனர். அவருள் வள்ளுவ தேவனர் நுண்ணிதி ஞாய்ந்தார் என்பது உலகறிந்த உண்மை. அவர் சிந்தனையறிவுத் தரத்தினை மணற் கேணியோடு உவமை செய்தார். அறிவென்பது தருக்கித்துச் சிந்தனை வன்மையால் உண்மை கண்ட சித்தாந்தங்களாகும். மணற்கேணி எத்தனையடி யாழமாகத் தோண்டப்படுகிறதோ அத்துணை யாழமாகவே அதன்கண்ணுள்ள நீரினளவும் இருக்கும். அதுபோல மதிவல்லானொருவன் எத்தனை சித்தாந்தங்களை நுண்ணிதினறிந்து தன் மதியை வழிப்படுத்தினனோ அத்துணை யாழமான உண்மைக் கருத்துக்கள் அவனது அறிவின் பிரேரகமாக வெளித்தோன்றும்.

### கற்பனை

மற்று உணர்வு ஞானம் சிந்தனை ஞானத்திலும் வேறுபட்டதாகும். சிந்தனை மதிவன்மையை மாத்திரம் வேண்டி நிற்கும். உணர்வு ஞானம் மதியொடு மனப் பண்பாடும் சேர்ந்ததாகும். உணர்வு ஞானத்தினையே கற்பனையென்று யாம குறிப்பிடுகின்றோம். கற்பனையூற்று ஒருவரிடத்துப் பிறிட்டுப் பிரவாகங் கொள்ளுமளவினை வரம்பு படுத்திக் கூறுதல் இயலாது. அஃது அவர் சக்தியைப் பொறுத்ததாகும். கற்பனையூற்று கல்வி கற்பதால் மாத்திரம் வரக்கூடியதன்று. கல்வியறிவு இல்லாதோரிலும் கற்பனையுணர்வு வாய்க்கப் பெறுதலைக் கண்கூடாக் காண்கின்றோம். வரகவிகளாக நாமம்பூண்டு இலக்கிய உலகினைவளர்த்த பெரியோர்கள் இவ்வகையான ஞானம் வாய்க்கப்பெற்றோராவர். இவர்களுணர்வு மணற்கேணியோடு உவமிக்கக்கூடியதன்று. [illegible] சக்தியின் தன்மை [illegible] எங்குளங்கு சுவைகளின் தோற்றமுண்டோ அங்கங்கெல்லாம் விறிட்டுப் பாயவல்லது. சிந்தனையுணர்வு வாய்க்கப்பெற்றோர் பொருள்களைப் பிரித்துப் பார்க்கும் வன்மை படைத்தோராவர். அவர்கட்குச் சுவையுணர்வே கிடையாது. கற்பனை வல்லோர் பொருள்களைச் சேர்த்துப் பார்த்துப் புதிய புதிய அழகுகளைக் கண்டு அவற்றை உலகிற்கு அளிக்க வல்லவராவர். இவ்விரண்டன் பாகுபாடுகளைச் 'சிந்தனையும் கற்பனையும்' என்னும் கட்டுரையின்கண்ணே கூறுவாம். ஆங்கு சிந்தனையுணர்விலும் கற்பனையுணர்வு மேம்பட்ட தென்பதனை விளக்குவாம்.

இன்னொரு விதமாக நோக்கினல் அக் கற்பனை யுணர்வினை 'ஆட்டீஷியன்' கிணற்றுடன் ஒப்பிடலாம். ஏனெனில் ஆட்டீஷியன் கிணற்றில் அனேக அயிர அடியாழத்திலிருக்கும் நீர் நெளிவுப் பாறைகள் காரணமாக உண்டான அமுக்கத்தினல் எந்நேரமும் தண்ணீர்உதைப்புடன் வெளிப்பாயும் அதுபோலக் கற்பனையுணர்வுடையவருடைய இருதயம் மதியுடன் றொடர்புற்று எந்நேரமும் உணர்வூற்றுடன் கலந்து புதிய புதிய ஆக்கததை வெளிவிட்டுக்கொண்டிருக்கும். கற்பனை பூத்த உள்ளத்திலே வெளியுலகக் காட்சிகள் தாக்குகின்றன. அத்தாக்கம் ஒருவேளை இன்பத்தை அளிக்கலாம் அன்றேற் றுன்பத்தை அளிக்கலாம். இன்ப துன்பங்கள் உலகக் காட்சிப் பொருள்களில் அமைந்துகிடப்பனவல்ல. அவை அக்காட்சியை அனுபவிப்பார் உள்ள நிலையிலேயே தங்கி யிருக்கின்றன. எடுத்துக்காட்டாக ஒரு கற்பனைவல்லஞான் இன்ப உணர்வே பூத்த இருதய முள்ளவராயின் அவர் அனுபவித்திடுவன யாவும் இன்பமயமாகின்றன: துன்ப உணர்வு பூத்த இருதய முள்ளவராயின் அவர் அநுபவித்திடுவன யாவும் துன்ப மயமாகவே அவருக்குத் தோற்றும். வாய்விட்டு இவ்விரு திறத்தோரும் கூறும் கூற்றுக்கள் இருவேறு வகையாய் இருக்கக் காணலாம். இதனை இலக்கிய அரங்கத்துப் பரக்கக் காணலாம்.

### கற்பனைச் சுவையும் சுவை அனுபவமும்

சுவையனுபவப் பேற்றினைப் பின் வரும் உதாரணத்தி லிருந்தறியலாம், சூரியன் தோற்ற மறைவின் றன்மையை நோக்கிக் குறித்த நேரத்திற் றவறாது தோற்றுதலும் நிலைபெறாது மறைதலுங் கண்டு வாய்மையில் வல்லோன் வெய்யோனே யெனக் கண்டு மகிழ்ந்த புலவர் ஓர் அரசனை வாழ்த்தும்பொழுது 'வாய்மை வயங்கிய வைகல்' என்றார். இவ்விடத்து அவரது உவகை யனுபவம் தோற்றுகிறது. வேறொருவர் மேற்படி நிகழ்ச்சியைக்கண்டு தோற்றம், நிலை, இறுதி ஆகிய முத்தொழில் உண்மையுந் தெரிந்து ஆன்மாக்கள் மீதிரங்கி "ஆழிசூழ்ந்த புவனத்தே தோன்றி இறவாது வாழ்கின்றார் யார்" என அவல அனுபவத்தோடு

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஆ
ஐப்பசிமீ கஙஉ செவ்வாய்க்கிழமை

## ஒருவாறு ஒழிந்தன

சென்ற வாரம் இந்த இலங்கையின் பிரதான பட்டினமாகிய கொழும்பிலும் ஏனைய சில பாகங்களிலும் நிகழ்ந்த தொழிலாளரின்வேலை நிறுத்துதல் கலகம் முதலிய தீய நிகழ்ச்சிகள், இந்நாட்டிலே சமாதான வாழ்க்கையை விரும்பியிருக்கும் மக்களனைவருக்கும் தீராத் திகிலை விளைத்துவிட்டன; துறைமுகத் தொழிலாளர் புகைரதப் பகுதித் தொழிலாள ரென்னுமிந்த இருபாலாரும் செய்த வேலை நிறுத்தலும் குழப்பமும் இலங்கை முழுவதையும் பெரிதும் பாதித்துவிட்டன; கடுமையான உணவுக் கட்டுப்பாட்டோடு கூடிய இக் காலத்திலே வேற்றுநாடுகளிலிருந்து இலங்கைக்கெனக் கொழும்புத் துறைமுகத்திற்கு இறக்குமதியின் பொருட்டுக் கொண்டுவரப்பட்ட உணவுப் பொருள் உடைப் பொருள்களையும் இன்னும் இந்நாட்டிலுள்ள மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாப் பொருள்களையும் கப்பல்களி லிருந்து இறக்குமதி செய்தற்கு அந்தத் துறைமுகத் தொழிலாளிகள் மறுத்துவிட்டனர்; இதனால், சில கப்பல்கள் தாம் கொண்டுவந்த பொருள்களை இறக்குதலின்றி வேறு துறைமுகங்களுக்கு மீண்டு போக நேர்ந்தன; துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தியமையினாலே, கொழும்புத் துறைமுகத்திற்கு, நம்பி வந்த கப்பல்களுக்குக் கரி நல்ல தண்ணீ ரென்னு மிவைகளைக் கொடுத்தலும் முடியாமற் போய்விட்டதாம்.

இனி, புகைரதப் பகுதித் தொழிலாளர் செய்த வேலைநிறுத்தத்தினால், புகைரதங்கள் ஓடாதொழிய, அவை வயிலாக உணவுப் பொருள் உடைப் பொருள் இன்னும் வாழ்க்கைக்கின்றியமையாப் பொருள்களைத் தலைநகரத்தி லிருந்து இலங்கையிலுள்ள ஏனைய பட்டினங்களுக்கும் தானங்களுக்கும் காலந் தவறாது அனுப்பி வைத்தல் இயலாதாக, கொள்ளல் விற்றல் குழம்பிவிட, பிரயாணிகள் போகவேண்டிய ஊர்களுக்கும் கருமம் பார்க்கும் ஸ்தானங்களுக்கும் போய் மீளுதல் இயலாதாக, நாடு முழுவதும் பஞ்சம் பசி திகில் முதலாம் பல தீமைகளும் ஏககாலத்திலே பரவலாயின; புகைரதத் தொழிலாளர் செய்த வேலைநிறுத்துதல் இவ்வளவோடு மாத்திரம் நின்றுவிடவில்லை; புகைரதத்திலே தொழில் செய்யும் யாரோசில இரக்கமற்ற துரோகிகளாகிய கூலிகள் வடபாகப் புகைரதப் பாதையில் அநுராசபுரத்தானத்திற் கணித்தாக, புகைரதப் பாதைக்கு இடையூறு செய்துவிட, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த புகைரதத் தொடர், தண்டவாளத்தை விட்டுத் தவறியதும், சில வண்டிகள் புரண்டதுவும், சில பிரயாணிகள் உடனே உயிர் மாண்டதும், பல பிரயாணிகள் ஊறடைந்து அவருள்ளுஞ் சிலர் சிகிச்சைப் போது இறந்ததும், அந்தப் புகைரதத்தில் ஏற்றப்பட்டுவந்த பண்டங்களுட் சிலவும், சில பிரயாணிகளிடத்துள்ள பணமுங் கொள்ளை போயதும், இன்ன பிற அநர்த்தங்கள் நேர்ந்ததும் எவர் ஞாபகத்திலும் உள்ளன; ஆனால் இறுதியிலே எடுத்துக் காட்டப்பட்ட துரோகமான செயல், தொழிலாளர்மீதுள்ள அநுதாபத்தையும் அறவே கெடுத்து அவர்களை வெறுக்கச் செய்வதாகும்; புகைரதப் பாதைக்குப் பங்கஞ் செய்தோரெனச் சிலர் இப்பொழுது அகப்பட்டிருக்கின்றன ரெனவும், விசாரணை நடப்பதாகவும் இப்பொழுது அறியலானேம்.

நடந்ததையிட்டுஇரங்கி ஆவதுயாது மில்லையாம்; ஆனாலும், இந்த வேலைநிறுத்தலிலும் கலகத்திலுமிருந்து ஒரு இரகசியம் அறியக் கிடக்கின்றது; அது என்னை யெனின், இப்பொழுதுள்ள மந்திரிமாரில் தொழிலாளர்களுக்கு எவ்வகையான நம்பிக்கையுமில்லையென்பதே; போக்குவரத்துப் பகுதி மந்திரி, தொழிற்பகுதி மந்திரி அரசாங்க சபை மூப்பனாராகிய இவர்களெல்லோரும், "பழையபடி வேலையைத் தொடங்கிச் செய்யுங்கள், விரைவில் உங்கள் குறைகளையும் முறையீடுகளையுயுந் தீர்த்துவிடுவோ"மென வாக்களித்தபோது, தொழிலாளர்கள் அவர்கள் வாக்கினைக் கேட்டார்களல்லர்; ஆனாற் பிரதிதேசாதிபதி யவர்கள் உறுதி வாக்கு உரைத்தவுடனே, தொழிலாளர்கள் அவருடைய வாக்கில் நம்பிக்கை வைத்துத் தங்கள் வேலை நிறுத்துதலையும் குழப்பஞ் செய்தலையும் தீரவே விடுத்துப் பழையபடி தத்தந் தொழிலைச் செய்யப் பிரவேசித்துவிட்டனர்.

ஆனால், தொழிலாளருடைய குறைகளை முறையே எடுத்துச் சொல்லி, அவர்களுடைய வேதனத்தை உயர்த்துவித்தலும், குறைகளை நீக்குவித்தலும் தொழிலாளரின் தலைவர்களென்றிருப்போரின் பிரதான கடமையாகும்; இத் தலைவர்களும், தம் தலைமைக் குட்பட்டுள்ள தொழிலாளிகளினால் நாட்டின் சமாதானத்திற்கும் கிரமமான வாழ்க்கைக்கும் எவ்வகையான முயற்சிகளுக்கும் இயன்றவரையிற் பங்கம் வராமற் பார்த்துக் கொள்ள வேண்டியவர்களாவர்; இவர்கள் இங்ஙனஞ் செய்தலை மறந்து, இனிமேல் வருமெனத் தாம் காத்திருக்கும் பதவிகளுக்கு ஆசைப்பட்டும், பகைசாதித்தற்பொருட்டும் ஒன்றுமறியாத மக்களாகிய ஏழைத் தொழிலாளிகளைத் தங்கள் பிரசங்கங்களினாலும், தாங்கள் வெளியிடும் துண்டுப் பிரசுரங்களினாலும் வேலைநிறுத்தத் தூண்டிவிடுவரேல், அச்செயல் நாடு முழுவதுக்கும் அநர்த்தம் விளைக்கும் பெருந் தீச்செயலாகும்; இவற்றைத் தொழிலாளர் தலைவரென்றிருப்போர் எந்தநேரமுஞ் சிந்தித்தல்வேண்டும்.

*

## இது முறையா?

சேன்றவாரம் இங்குள்ள மக்களுக்குக் கூப்பன் கட்டுப்பாட்டு விகிதத்தின்படி பறைவெட்டி யொருபடி யரிசியும், அரைருத்தல் சீனிக்குப் பதிலாகக் கால்ருத்தல் சீனியுந்தான் கொடுக்கப்பட்டன; மா முதலிய உபஉணவு யாதும் வழங்கப்படவில்லை; இதற்குக் காரணம் கொழும்புமுதலாம் பட்டினத்தில் நேர்ந்த புகைரதத் தொழிலாளர் வேலை நிறுத்தியமையும், வடமாகாணப் புகைரதத் தொடருக்கு அநுராசபுரத்திற்கணித்தாக நேர்ந்த விபத்தும், கொழும்புத் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதித் தொழில் செய்வோர்களான கூலியாளர்கள் ஒருங்கு சேர்ந்து வேலை செய்யாது நிறுத்தியதுமாகுமென அதிகாரிகள் தெரிவித்திருந்தார்கள்; இங்குள்ள ஏழைமக்களும் சில வருடங்களாகப் பட்டினி கிடக்கப் பழகிக்கொண்டு வருகின்றனராதலின், "என்ன செய்யலாம்! இதுவும் எங்கள் பொல்லாத விதிதான்" என்று சொல்லித் தாம் பட்டினி கிடந்து கொண்டு கிடைத்த உணவுப்பொருளை ஆக்கித் தங்கள்சின்னஞ்சிறியவர்களாயுள்ளபிள்ளைகட்குமாத்திரம் ஒருவாறு ஊட்டிவந்தார்கள். அனால் அடுத வார (இந்த வார)மாயினும்சோதுமைமாக் கூடிய விகிதத்திற் கிடைக்குந்தானே, அதனை ஆக்கி யுண்ணலாமென்று உண்மையாய் நம்பியிருந்தார்கள் ஏழை மக்கள்; என்செய்யலாம், ஏழைகள் ஒன்றை யெண்ணியிருக்க அதிகாரிகள் வேறொன்றையெண்ணிச் செயதுவிட்டார்கள்! சென்ற வாரம் வழங்கப்பட்ட விகிதமாகவே நேற்றுத்தொடக்கம் பறைவெட்டி ஒருபடி யரிசியும் (அதாவது உண்மையில் முக்காற்படி யரிசியும்) கால்ருத்தல் சீனியும் உடலோடு கூடிய மானுட சன்மமெடுத்த உயிருக்கு ஏழு நாட்களுக்கிடையில் கொடுக்கப்படலாயிற்று; முக்காற்படியரிசியை ஏழாகப் பிரித்துவிட்டால் ஒருநாளைக்கு ஒருபிடி யரிசிதானும் வராதே; அந்தஅரிசி வாய்க்கரிசிக்கும் போதாதே! மா முதலிய உபவுணவில்லாமல் இந்தப் பிடியரிசியை ஒருசாண் வயிறுள்ள மானுட சன்மம் ஒருநாள் முழுவதற்கும் உணவாகக் கொண்டுஉயிர்வாழ்வதெப்படியென்று கட்டுப்பாட்டதிகாரிகளைக் கேட்கின்றோம்? ஐயோ! அரிசிதான் இல்லை: உடம்பை விட்டுப்போக வகையறியாமல் துடிக்கும் இந்த உயிரின் துடிப்பை நீக்குவதற்கு இடையிடையே தேநீரைக் கோப்பியைக் குடிக்கலாமோவென்றால், அதற்கும் கால்ருத்தல் சீனியை ஏழாகப் பிரித்துவிட்டால் வருஞ்சீனியைக் கோப்பியிலாக தேநீரிலாகக் கலந்தால் அது இனிக்குமா! இல்லையேற் சீனியைப் பார்த்துக்கொண்டு தேநீர் கோப்பியைக் குடிப்பதா? பனங்கட்டி, சருக்கரை கற்கண்டு என்னும் இனிப்புப் பண்டங்கள் இக்காலத்திலேகிடைக்குமா? "இந்த நடையேன்டி, இடுப்பிலே கையேன்டி" என்றவிதமாக இப்படிப் பஞ்சம் பசிப் பரிபாலனஞ் செய்வதற்கா, ஒரு கட்டுப்பாட்டு மந்திரியும், அவருக்கொரு காரியநிருவாகசபையும் ஆயிரக்கணக்கான கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்? செல்வர்களாயுள்ளவர்கள் சோர வியாபாரமூலமாகப் பெறும் அரிசியில்லாவிட்டால் பட்டினியால் அவர்கள் இறந்துபட, அவர்களுடைய பிரேதங்களை அடக்கஞ்செய்த இடத்தில் இற்றைவரையில் புல்பூண்டுகள் முளைத்து வளர்ந்து நிற்குமாமே? இது மெய்தானா? உண்ண உணவில்லாமல் குடிக்கக் கஞ்சியில்லாமல் இங்குள்ள ஏழை மக்கள் இன்னமும் எவ்வளவு காலத்திற்கு உயிரோடிருத்தல் முடியும்? புதிய பாராளுமன்றப் பரிபாலனம் வரும்போது மந்திரிமார் அடக்கிபாளுவதற்குப் பிரசைகளும் உயிரோடு இருக்க வேண்டுமல்லவா? சிழமைக் கொருமுறையேனும் வயிறார உண்ண உணவுக்கு வகையில்லை; மானத்தைக் காக்கும்படி உடுக்கத் துணிக்கு மார்க்கமில்லை; இலங்கை மக்களுக்கும் பாராளுமன்றப் பரிபாலனமும் சுயராச்சியமும் வேண்டுமாம்! நல்லாயிருக்கின்றது! கருப்பையின் முட்டைக்கும் கல்லிலுள் தேரைக்கும் விருப்புற்ற முளிக்கும் விமலா! நாங்கள் படும்பாட்டையும் எங்கள் அதிகாரிகள் பரிபாலனத்தையும் பார்த்துக்கொண்டு சும்மாயிருக்கின்றாயா?

---

## பிந்திய சமாசாரம்

இரண்டு கப்பல்கள் தனித்தனி 8000 தொன் நிறை கொண்ட கோதுமை மாவுடன் முந்தைநாள் கொழும்புத் துறைமுகத்தையடைந்தன வெனவும், இன்னுமொரு கப்பல் 3400 தொன் கொண்ட மாவுடன் நேற்றைத்தினம் வந்திருக்க வேண்டுமெனவும் அறியக்கிடக்கின்றது; ஆனாலும் வருகிற நவம்பர்மாச இரண்டாம்கிழமை தொடக்கமாகத்தானும் மா அரிசி நெல் என்னுமிவைகளின் விகிதம் சிறிது கூட்டிக்கொடுக்சப்படுமென அறியலானேம்.

---

## பட்டினவாசிகளுக்குத்தானு இது?

யாழ்ப்பாணப் பட்டின வாசிகளுக்குத்தான் இந்த வாரமும் மாக் கொடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. அவர்களுக்கு ஆளுக்கு 2 படி நெல் அல்லது 1 படி அரிசி மாத்திரமே கொடுக்கப்பட்டிருக்கிறது. சீனியும் ஆளுக்குக் கால் ருத்தல் விகிதமே வழங்கப்பட் டிருக்கிறது. ஆனல், கிராமவாசிகள் அதிர்ஷ்டசாலிகள், அவர்களுக்குவழக்கமான அரிசி அல்லது நெல்லுடன் ஆளுக்கு ஒருருத்தல்விகிதமாக மாவும் வழங்கப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது.

---

## துணிகரக் களவு

யாழ்ப்பாணம் பெரியகடை, கதிரேசன் கோவிலுக்கு அணித்தாகவுள்ள வரதராஜச் செட்டியார் என்பவருடைய புடைவைக் கடையில் சென்ற வெள்ளிக்கிழமையிரவு திருடர் புகுந்து 5000 ரூபா பெறுமதியான புடைவைகளைக் களவாடித் தப்பிவிட்டனர் என்று தெரிகிறது. புடைவைகளுடன், கடைக்குள் ளிருந்த பணப்பெட்டியும் களவாடப்பட்டதாம். எவராவது இன்னும் இவ்விஷயமாக அகப்படவில்லை. பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர்.

---

## காலநிலை

இடையிடையே இங்கே மழை பெய்கிறது, நெற்பயி ருடையோர்க்குப் பெருமழை பெய்தலின்லி இப்படி இடையிடையே சிறுமழை பெய்தல் நன்மையாகுமெனக் கூறுகிறார்கள் சில வயல்களில் களைகட்டுதலாகிய கருமமுந் தொடங்கலாயிற்று; ஊரிலே தடிமலோடு கூடிய காய்ச்சல் இருமல் சின்னமுத்து என்னும் நோய்கள் உண்டு.

---

## புகைரதப்பகுதித் தலைவர்

இலங்கைப் புகைரதப்பகுதித் தலைவராக இதுவரை கடமை பார்த்து வந்த மிஸ்ரர் ஜே ஈ. எஸ். பொட்ஜர் என்பவர் அவ்வுத்தியோகத்தில் நிரந்தரமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்திரிமார்மீது நம்பிக்கையில்லை!

## வேலைநிறுத்தம் காட்டியுள்ள பாடம்

### சின்னத்தனமான செய்கையாற் சீர்கேடு

**ஐக்கிய தேசியக் கட்சி ஆற்றப்போவது என்ன?** | **15 ஆண்டு முடியாதது இனி முடியப்போகிறதா?**

### உருட்டும் புரட்டும் இனி நிற்கட்டும்

(நமது அரசியல் நிருபர் எழுதுகிறார்)

**மந்திரிகளின் மதிப்பு**

எங்கள் இலங்கையில் இன்று பதவியில் வீற்றிருந்தருளும் மந்திரசபையினர்க்கு உள்ள மதிப்பும் கௌரவமும் அவர்களுடைய வார்த்தைகட்கும், வாக்குறுதிகட்கும் கொடுக்கப்படும் மரியாதையும் எவ்வளவு என்று சென்றவாரம் அகில இலங்கையிலும் நிகழ்ந்துள்ள பொது வேலைநிறுத்தத்திலிருந்து அறிந்துகொள்ளலாகும். போக்குவரத்துப்பகுதி மந்திரி கொத்தலாவலை ரேடியோமூலம் தொழிலாளர்க்கு ஓர் வேண்டுகோள் விடுத்தார். வாருங்கள்: வந்து வேலையைச் செய்யுங்கள்: அதன்பின் உங்கள் குறைகளைச் சொல்லுங்கள்: என்னைப்போல் உங்களுக்குச் சகாயஞ் செய்யக்கூடியவர் வேறெவருமில்லை என்றெல்லாம் மிஸ்ரர் கொத்தலாவலை தம்பட்டம் அடித்தும் அவருடைய மொழிகட்குச் செவி சாய்க்காது, தொழிலாளர்கள் தங்கள் குறைகளை நேரே தேசாதிபதிக்கு முறையிட்டதன் காரணம் என்ன? தேசாதிபதி ஓர் அந்நியசாதியினர், ஆளும் சாதியினரைச் சேர்ந்தவர்: அப்படியிருப்பவும், தமது சொந்த நாட்டு மனுஷராகிய ஓர் மந்திரியின் வாக்குறுதிகளைப் புறக்கணித்துவிட்டுத் தேசாதிபதியிடம் தொழிலாளர் சென்று தம் குறைகளைச் சமர்ப்பித்ததற்குத் தக்க காரணம் ஒன்று இருக்கத்தான் வேண்டும்.

●

**காரணம் என்ன?**

ஏறக்குறைய 15 ஆண்டுகளாக இந்த இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டுள்ள செனநாயக்காக் குழுவினர், பொதுஜன விசுவாசத்தையும் நம்பிக்கையையும் இழந்துவிட்டனர். இவர்கள் பகிரங்கமேடைகளிற் பேசுவதுஒன்று ஆனால் செய்வது ஒன்றாக நடந்து வந்தமை தென்னிலங்கைத் தொழிலாளர்க்குத் துலாம்பரமாக விளங்கிவிட்டது. ஓர் உதாரணம் காட்டுதும். சென்றசெவ்வாய்க்கிழமை காலை தொழிலாளர் தூதுக்கோஷ்டி ஒன்று தேசாதிபதி அவர்களைச் சந்திக்க ஏற்பாடாகியிருந்தது. அந்தத் தூதுக்கோஷ்டிக்கு ஆலோசகராக சமசமாஜத் தலைவர் டக்ரர் என். எம். பெரீராவும் அதனுடன் தேசாதிபதியிடம் செல்வதென்று உத்தியோக பூர்வமாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இது எங்கள் மந்திர சபையினர்க்கும், ஏனைய அதிகாரிகளுக்கும் நன்கு தெரிந்திருந்தது. அப்படித் தெரிந்திருந்தும், அன்றுகாலை சில பொலிஸ் அதிகாரிகள் டக்ரர் பெரீராவின் வீட்டிற்குள் நுழைந்து, அவருடைய பொருள்களைச்சோதித்துவிட்டு, அவரைப் பொலிஸ்தானத்துக்கு அழைத்துச் சென்றதன் காரணம் என்ன என்பதை நாம் அறியவிரும்புகிறோம். தேசாதிபதியிடம் டக்ரர் பெரீரா செல்லவேண்டிய நேரத்திலே இப்படித் தாமதப்படுத்துதற்கு ஆன தக்க காரணம் ஏதும் இருந்தால், அதனை இற்றைவரை பொலிஸ் அதிகாரிகளாவது, அவர்களின் எஜமானர்களாயுள்ள மந்திரிகளாவது அதனை வெளியிடவில்லை? இலங்கை முழுவதையும் பாதிக்கக் கூடிய ஓர் விஷயத்தையிட்டுப் போகவிருந்த டக்ரர் பெரீராவை இவர்கள் தாமதப்படுத்தற்கான அத்தகைய பொல்லாத ஆவசியகக் கருமம் என்ன நிகழ்ந்துவிட்டது? அப்படி ஏதும் நிகழ்ந்தால், கடைசிவரை அவரைச் சிறையில் வைத்திருக்காது ஏறக்குறைய 4மணிநேரத்துக்குப்பின் விட்டதன் காரணம் என்ன? டக்ரர் பெரீரா இன்றி, தூதுக்கோஷ்டி தேசாதிபதியுடன் விஷயங்களைப் பேச மறுத்தது என்றும். அதனையிட்டு டக்ரர் பெரீராவுடன் தூதுக்கோஷ்டி மீண்டு வருதற்காக, தேசாதிபதி அன்று பின்னேரம்வரை விவாதத்தைத் தவணையிட்டார். தேசாதிபதி அவர்களின் இந்தப் பரந்த நோக்கம், அதிகாரிகளுக்கும் அதிகாரிகளின் எஜமானர்களாயுள்ள மந்திரிகளுக்கும் ஏன் இல்லாமற் போனது என்று கேட்கிறோம்.

●

**சின்னத்தனமான செயல்**

இப்படியான செயல்கள் மிகவும் சின்னத்தனம் வாய்ந்தவை. இத்தகைய செயல்களினால்தான் இப்போதுள்ள மந்திரசபையினர் தமதுமானத்தைக் கவிழ்த்துக் கொட்டிவிட்டுப் பவிசுகெட் டிருக்கின்றனர். இப்படி அற்பத்தனமாகக் கருமம்ஆற்றியமை இது முதல்தடவையல்ல என்பதைச் சகலரும் அறிவர். பிரேஸ்கேர்டில் என்னும் ஆஸ்திரேலியச் சமதர்மி விஷயமாக இந்த மந்திரசபையினர் ஆற்றிய சீர்கெட்ட விஷயம் உலகமே அறிந்து நகையாடியது. இந்த மந்திரி சபையினர் இந்த நாட்டிலே பதவி வகித்திருக்கும்வரை கதிமோட்சம் கிடைக்கமாட்டாது.

●

**இவர்கள்தானா?**

ஐக்கிய தேசியக்கட்சி என்று நவமாக இந்த இலங்கையில் ஓர் அரசியற் கட்சி தோற்றியிருப்பது யாவரும் அறிந்த ஓர் விஷயமாகும். இக்கட்சி அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் பங்குபற்றி அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற நோக்கம் கொண்டிருக்கிறது. இக்கட்சி இப்போது தனது நோக்கங்களைப் பற்றிய ஓர் துண்டுப் புத்தகத்தை வெளியிட்டிருக்கிறது. ஓர்நாட்டில், என்ன என்ன சலாக்கியங்கள் பொதுஜனங்களுக்கு வேண்டுமோ, அவை எல்லாம் துண்டுப் பிரசுரத்திற் காணப்படுகின்றன. இந்தக் கட்சி இப்படியெல்லாம் செய்யுமானால், இலங்கைக்கு இனி என்ன குறை என்று எவரும் பிரமிக்கத்தக்க விதமாக இந்நூலில் அவை காட்டப்பட்டிருக்கின்றன, அத்தகைய பரந்த லட்சியங்கள். ஆனால் இது வெறும் நாடகம்! ஓர் கண்துடைப்பு; பொதுஜனங்களை ஏமாற்றி அவர்களது வாக்குச் சம்பளத்தைப் பெற்றுப் பாராளுமன்றத்திற்கு ஓர் சில பிரதிநிதிகள் போவதற்குச் செய்யும் சூழ்ச்சி! இப்போதுஐக்கியதேசீயக்கட்சியில் உள்ள பிரமுகர்கள்யாவரும் அரசாங்கசபையிலும் மந்திரசபையிலும் இருக்கிறார்கள். இனிச் செய்வோம் என்று சொல்லும் கருமங்களை இவர்கள் இதுவரை ஏன் செய்யவில்லை? 15 வருஷகாலமாக முக்காற்பங்கு சுயராஜ்யத்தில் நாட்டுக்கு நன்மைசெய்ய நினைக்காத இந்தப் பதவிவேட்டுவர் இனி அதனைச்செய்வர் என்பதற்கு என்ன உத்தரவாதம், இந்த 15 வருஷகாலமாக இவர்கள் ஏதும் நன்மையான கருமங்களைச் செய்ய முன்வந்தபோது இவர்களை யாராவது தடுத்தனரா? நாட்டின் பணத்தையெல்லாம் ஒன்றுக்கும் பயன்றராத் திட்டங்களில் விட்டு இந்நாட்டு மக்களை ஒட்டாண்டியாக்கியுள்ள இவர்களா இனி நன்மை செய்யப்போகிறார்கள்? அரை நிர்வாணமாக்கிய இவர்களா இனி எம்மைப் பாதுகாக்கப்போகின்றனர்! பட்டினியில் தவிக்க விடுத்துள்ள இவர்களா இனி எமக்கு உஜ்ஜீவிக்க வழி தேடப்போகின்றனர்? இந்தப் பெரிய கேள்வியை இந்நாட்டின் ஒவ்வோர் பிரசையும் கேட்கவேண்டிய காலம் இப்போது வந்துவிட்டது.

## பர்மா அரசியல்

### சமதர்மிகள் பகிஷ்காரம்

இந்தியாவில் இப்போதுள்ளது போல், பர்மாவிலும் ஓர் அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அதில் பர்மாவில் உள்ள சகல கட்சிகளும் பங்குபற்றின. ஆனால் இப்போது சமதர்மிகள் இந்த அரசியலைப் பகிஷ்கரிக்கத் தீர்மானித்துவிட்டனர். ஆங்சேன் சேனாதிபதியின்கீழ் அமைக்கப்பட்டுள்ள இந்த அரசாங்கம் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளின் கைப்பொம்மையாகவே இருக்கும் என்றும், இப்படியான ஓர் அரசியலில் தேசியபக்தர்களுக்கு இடம் இல்லை என்றும், சமதர்மக்கட்சியினர் கூறுகின்றனர். சமதர்மக் கட்சியின் அங்கத்தவராக இந்த அரசாங்கத்தில் அங்கத்துவம் வகித்த தீன் பே என்பவர் இப்போது விலகிவிட்டார்.

சமதர்மக் கட்சியினர் தம்நாட்டை அந்நியரான ருஷியர்க்குக் காட்டிக்கொடுக்கும் துரோகிகள் என்றும், அவர்களே நாட்டின் முன்னேற்றத்தைப் பலவகைகளாலும் தடைப்படுத்துகின்றனர் என்றும் ஆங்சேன் கட்சியினர் கூறுகின்றனர்.

## அரிசியும் இல்லை! மாவும் இல்லை!

### உணவுப் பகுதி அதிகாரி வெளியிடும் விபரம்

இப்போது இலங்கையில் உணவு நிலை மிகவும் மோசமாக இருக்கிறது என்று உணவு விநியோக அதிகாரி திரு கே. வைத்தியநாதன் ஓர் அறிக்கைமூலம் தெரிவிக்கிறார்.

இப்போதுள்ள அரிசி இருப்பு இன்று (29-10-46) வரைதான் போதும். அடுத்த சில நாட்களில் ஏறக்குறைய 20000 தொன் அரிசி இங்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது. இது வருமானால் நவம்பர் மாதம் ஓரளவுக்குச் சரிப்படுத்த முடியும்.

கோதுமைமாவின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. நவம்பர் மாதம்முழுவதிலும், டிசெம்பர்மாதம் ஓர் பகுதியிலும், மாவின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கும் என அஞ்சப்படுகிறது அதன்பின் தேவைக்குப் போதிய மா வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பார்ளி, சோளம் முதலிய தானியங்கள் போதிய அளவு இருப்பில் உண்டு மொச்சை, கடலை முதலியன இன்னும் இரண்டு வார காலத்தில் ஏராளமாக இங்கே இறக்குமதியாக்கப்படும்.

இப்போதுள்ள சீனி நிலைமை மிகவும் திருப்தியாக இருக்கிறது.

பால் உணவுப் பொருள்களின் நிலைமை திருப்தியாகவிருக்கிறது இவற்றின்மீதுள்ள கட்டுப்பாட்டை நவம் மாத இறுதியில் நீக்கி இதற்கான கட்டுப்பாட்டுப் பகுதியையும் மூடிவிடத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. நவம்பர் மாதத்துக்குப்பின், இப்போது போல, பால் உணவுப் பொருள்கள் வாங்க 'பேர்மிற்'கள் தேவையில்லை. ஆனால் விலைக் கட்டுப்பாடு இருக்கும்.

காப்பிக்கொட்டை, மிளகாய், வெங்காயம், கொத்தமல்லி, வெள்ளைப்பூடு, வெந்தயம், மிளகு முதலிய பொருள்கள் போதியஅளவு இருப்பில் உண்டு.

பெருந் தொகையான உருளைக்கிழங்குகள் இன்னும் சில தினங்களில் இறக்குமதியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### ஜெர்மனியில் சமதர்மிகள்

ஜெர்மனியில் இப்போது சிலகாலமாகச் சமதர்மிகளுடைய செல்வாக்கு அதிகரித்து வருகிறது என்று கூறினும் பொருந்தும். ஜெர்மனியை 4 கூறாகப் பிரித்து ருஷியா, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் என்னும் நான்கு நான்கு நாடுகளும் பங்கு போட்டு வைத்திருக்கின்றன. இந்த நான்கு இடங்களிலும் தனது செல்வாக்கை அதிகரிப்பிக்க ருஷியா பல வழிகளாலும் முயன்று வருகின்றது

சென்றவாரம் அமெரிக்காவின் ஆதிக்கத்தின்கீழ் உள்ள பகுதியில் சமதர்மிகளுடைய விஷமத்தனமான செயல்கள் கண்டுபிடிக்கப்பட்டனவாம். இரண்டாயிரம் அங்கத்தவர்களையுடைய ஓர் வாலிபர் ஸ்தாபனம் அங்கேயிருந்து ருஷியாவுக்கு உளவு சொல்லிக் கொடுக்கிறதாக இப்போது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த வாலிப இயக்கத்தினர், தாங்கள் அணிந்திருக்கும் சட்டைத் தையலுக்குள் இரகசியக் கடிதங்கள் கொண்டு ருஷியப் பகுதிக்குச் சென்றுவருவதை அமெரிக்க அதிகாரிகள் கண்டுபிடித்து, அவர்களிற் பலரைச் சிறைப்படுத்தியிருக்கின்றனர்.

### யேசுவின் தேவாம்சம்

#### கோயரிங் மறுத்தார்

ஜெர்மன் தளபதியான ஹேர்மன் கோயரிங் சென்ற வாரம் தற்கொலை செய்து இறந்தார் அல்லவா? அவர் தற்கொலைசெய்து இறக்குமுன் "எனது தந்தையான ஆண்டவனில் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன். என்னுடைய மரண விஷயமாகப் பிரவேசிப்பதற்கு இது ஓர் அற்ப விஷயம். ஆண்டவன் இவ்விஷயத்தில் என்னைக் காப்பாற்றவில்லை என்று நான் எப்படிக் கூறமுடியும்?என்றாராம்"

கோயரிங் யேசுகிறீஸ்துவின் தேவாம்சத்தில் நம்பிக்கையில்லாதவர். எனவே, கிறிஸ்தவர்க்குக் கடைசியாகக் கொடுக்கப்படும் "கொம்மியூனியன்" என்னும் பிரார்த்தனை செய்ய, அங்கிருந்த அமெரிக்க பாதிரியார் மறுத்துவிட்டாராம்.

### 2 346,000 புசல் நெல்

இந்த மாதத்திலே 12-ம் திகதிவரை 46,800 புசல் நெல் அரசாங்கத்தாரால் உள்ளூரில் வாங்கப்பட்டது. இந்த ஆண்டில் இதுவரை எல்லாமாக 2,346,000 புசல் நெல்லு, உள்ளூர் நெல்வாங்குந் திட்டத்தின்படி வாங்கப்பட் டிருக்கின்றது என உணவுப்பகுதி அதிகாரி ஸ்ரீ கே. வைத்தியநாதன் அவர்கள் தெரிவிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிச் செய்வதென்ன?

## ஆபத்திற் சிக்கியோர்க்கு நட்டம் அளிப்பது!

சில நாட்களாக இந்த இலங்கை மக்களைப் பிடித்துவந்த வேலைநிறுத்த வியாதி அகன்றுவிட்டது. இந்த வியாதி முற்ருகவே ஒழிந்துவிட்டது என எதிபார்ப்போமாக. இந்தப் பாரதூரமான வேலைநிறுத்தத்தின் பயனுக நட்டம் அடைந்துள்ளவர்களின் கதி என்னவென்பதை இனி அரசாங்கம் சிந்திக்கவேண்டிய சந்தர்ப்பம் இப்போது வந்திருக்கிறது.

அநுராசபுரப் புகைரத விபத்தில் எத்தனையோ பேர் உயிரிழந்தனர். பலர் இனியொருபோதும் உழைத்துச் சீவியத்தைநடத்தமுடியாதவாறு அங்கஹீனம் அடைந்தனர், இன்னும் பலர் தம் பொருள்பண்டங்களை இழந்தனர், இந்த நட்டம் எல்லாம் யாரால் வந்தன? இதிற் பாதிக்கப்பட்டுள்ளோரின் அவதானக் குறைவினல் என்று அரசாங்கம் கூறுமா? இந்த நட்டத்துக்குத் தக்க ஈடுகொடுத்தல் அரசாங்கத்தின் கடமையாகும்.

இவ்விஷயத்தில் மந்திரசபையினர் தமது வழவழாக் கொள்கைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, நட்டமடைந்த ஊரவர்களுக்கு, அரைகுறைபான நட்ட ஈடு அளித்தலின்றிப் போதிய ஈடு அளிக்கவேண்டும். அரசாங்க சபை யங்கத்தவராயுள்ளோர் இதனைப்பற்றி மவுனம் சாதிக்காது ஆக வேண்டியனவற்றை உடன் செய்ய முயற்சிகள் ஆற்றவேண்டும். இதிற் பாதிக்கப்பட்டுள்ளவர்களும் பாராமுகமாயிருக்காது, தமக்கு உரித்தானவற்றைப் பெறக் கருமங்கள் செய்ய வேண்டும்.

# மலாய்நாடு

## இலங்கையர்க்கு இனியும் வசதியுண்டாம்!

இலங்கையரசாங்கத்தின் பிரதிநிதியாகவுள்ள திரு ஏ. ஐ. இராஜசிங்கம் கோலாலம்பூரிலிருந்து மலாய்நாட்டில் இலங்கை மக்களின் எதிர்காலம் சம்பந்தமாக ஓர் அறிக்கை விடுத்துள்ளார்: அவர் கூறுவதாவது:-

"மலாய் நாட்டின் எதிர்காலம் என்ன? அங்கே குடியேறியுள்ள இலங்கையர்க்கு எதிர்காலத்திலே சம அந்தஸ்தும் பிரஜா உரிமைகளும், ஏனைய சகல வசதிகளும் அளிக்கப்படுமா? அல்லது இந்த உரிமைகளும் வசதிகளும் அங்கு குடியேறியுள்ள ஒரு சில வகுப்பினர்க்குத்தான் வழங்கப்படுமா? என்னும் இன்னோரன்ன கேள்விகள் இலங்கை மக்கள் மனத்தில் இப்போது எழுவது சுபாவமே.

"மலாய்நாட்டிற் குடியேறியுள்ள மக்களுக்கிடையே பட்சபாதகம் பாராட்டி, இலங்கையர்க்கு எதிராக வேண்டும் என்று சட்டங்கள் இயற்றப்படுவதை, அங்கே பரிபாலனம் செய்யும் மேலதிகாரிகள் அநுமதிப்பர் என நான் நம்பவில்லை, எனவே, இவ்விஷயமாக இலங்கை மக்கள் அஞ்சவேண்டியது இல்லை.

"மலாய்நாட்டில் இலங்கையர்க்கு நல்ல சந்தர்ப்பங்கள் உண்டு என்று தான் நான் நினைக்கிறேன். நானும் இந்த நாட்டில் வாழ்ந்து சட்டத் தொழிலை ஆற்றத் தீர்மானித்துள்ளேன்"

# நிறத் திமிர்

## ஐக்கியதேச ஸ்தாபனத்தில் ஸ்மட்சுக்குத் தோல்வி

தென்னுபிரிக்காவிலே நிறத்திமிர் பிடித்த ஸமட்ஸ் அரசாங்கம் அங்கு குடியேறியுள்ள இந்திய மக்களுக்குச் செய்யும் அநீதியைப்பற்றிய முறைப்பாடு ஐக்கியதேச ஸ்தாபனத்திற் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை சென்ற வியாழக்கிழமை நியுயோர்க்நகரத்தில் நிகழ்ந்த ஷைஸ்தாபனத்துக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இந்தியாவின் பிரதிநிதிகளுக்குத் தலைமைதாங்கி பண்டிதர் ஜவஹர்லால் நேருவின் சகோதரி ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி சென்றூர். தென்னுபிரிக்காப் பிரதம சேனுதிபதி ஸ்மட்சும் தம் கட்சியை எடுத்துரைக்க வந்தார்,

இப்பிரச்சினை விவாதத்துக்கு வந்ததும் இவ்விஷயத்தை இந்த ஐக்கிய தேச ஸ்தாபனத்திற் பேசி முடிவு செய்தல் நியாயமில்லை ஆதலால் அதனைத் தவிர்த்துவிடுதல்வேண்டும் என ஸ்மட்ஸ் வாதித்தார். தென்னுபிரிக்காவில் வதியும் இந்தியர் இந்தியாவின் பிரசைகளல்லர். அவர்கள் தென்னுபிரிக்க அரசாங்கத்தின் பிரஜைகள். எனவே, இந்தியாவின் கேள்விப்படி இதனை இங்கேவிவாதித்தல் சரியல்ல; ஓர் நாட்டின் பிரசைகளைப்பற்றி இன்னோர் நாட்டு அதிகாரிகள் விசாரணை செய்ய முற்பட, அதற்கு நாங்கள் இடங்கொடுத்தால் இது எங்கே கொண்டுபோய் விடுமோ தெரியாது என்று ஸ்மட்ஸ் பேசினர்.

இவர் கூற்றை இந்தியப் பிரதிநிதிகளில் ஒருவரான நீதிபதி எம். ஸி. சக்லா ஆணித்தரமாகக் கண்டித்தார். ஸ்மட்சின் ஒவ்வொரு கூற்றும் ஆதாரமற்றது என்பதை இந்தியாவின் வீரப் புதல்வர் உலக மேதாவிகள் கூடிய அச்சபையில் எடுத்துக்காட்டினர். அவர்களுக்கு உதவியாக ரூஷியப் பிரதிநிதி, உக்கிறேன் பிரதிநிதி, சீனப் பிரதிநிதி என்பவர்கள் பேசினர்.

ஈற்றில் ஸ்மட்சின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது, இந்தப் பிரச்சினையைப்பற்றிய விஷயங்களை ஆராய ஐக்கிய தேச ஸ்தாபனத்து உபசபை ஒன்றிற்கு விடப்பட்டிருக்கிறது.

நிறத்திமிர் பிடித்துள்ள தென்னுபிரிக்க வெள்ளையதிகாரிகள் ஐக்கிய தேச ஸ்தாபனத்தில் இப்போதுள்ள இந்தியப் பிரதிநிதிகளை சாதாரண தலையாட்டிப் பொம்மைகள் என்று தவருக நினைத்துத் தம்காரியம் ஜெயமாகும் என வந்தனர். ஆனல் இப்போது காலம் மாறிவிட்டது. தியாகம் என்னும் அக்கினியிற்பிறந்த வீர புருஷர்கள் தான் இன்றைய இந்தியப் பிரதிநிதிகள் என்பதை ஸ்மட்ஸ் இப்போது அறிந்துவிட்டார்,

## அங்கோடையில் வேலைநிறுத்தம்

அங்கொடைப் பைத்தியகாரச் சேவகர் மீண்டும் வேலைநிறுத்தஞ் செய்துவிட்டனர் அதன்பயனுகச் சென்ற வியாழக்கிழமை காலை அங்கிருந்த ஓர் பைத்தியகாரன் ஓடிவிட்டான்

எல்லாமாக 35 பொல்லாத பைத்தியகாரர் இந்த வேலைநிறுத்தங்களின் பின்னர் தப்பி ஓடியதாகத் தெரிகிறது.

வேலை நிறுத்தஞ் செய்யும் சேவகரின் கோரிக்கைகளுக்கு இணங்குவதில்லை என அதிகாரிகள் பிடிவாதமாக நிற்கின்றனர்.

இவர்கள் வேலைநிறுத்தஞ் செய்து இன்னும் இரண்டொரு தினங்களில் வேலைக்குத் திரும்பாவிட்டால், புதியவர்களை நியமிக்க அதிகாரிகள் நிச்சயித்துள்ளனர்.

# 200 படைகள்

## ருஷியா செய்வதன் காரணம்?

இன்று ஐரோப்பாவிலே தனது செல்வாக்குக் குட்புட்ட நாடுகளிலே சோவியத் ருஷியா பெருந் தொகையான ராணுவத்தை வைத்திருப்பதன் காரணம் என்ன? ஏறக்குறைய அப்படியாக 200 பட்டாளங்களை வைத்துக்கொண்டு ருஷியா அட்டகாசம் செய்வது பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குத் தெரியமாட்டாதா என்று யுத்தகாலத்திற் பிரிட்டிஷ் பிரதமமந்திரியாக விருந்த மிஸ்ரர் வின்ஸ்ரன் சேர்ச்சில் சென்றவாரம் பாராளுமன்றத்திற் கேட்டார்.

அரசாங்கத்தின் சார்பாகப் பதில் இறுத்த ஹெக்ரர் மக்நீல் என்னும் மந்திரி, ஐரோப்பியநாடுகளில் சோவியத் ருஷியா நிறுவியுள்ள பட்டாளத்தின் தொகை எவ்வளவு என்று தெரியாதபோதிலும், இப்படிச் சேனைகளை வைத்திருக்கிறது என்பது யாவரும் அறிந்த விஷயந்தானே என்று கூறினர்.

## வேலைநிறுத்தம் ஒழிந்தது

அரசாங்கத்தில் தினசரிச் சம்பளம் பெறும் வேலையாட்கள் செய்த வேலைநிறுத்தத்தின் பயனுக ஸ்தம்பிதம் அடைந்த பல நிலையங்கள் இப்போது நிலைமை சீர்திருந்தியதும், முன்போல வேலை செய்கின்றன, துறைமுகத்தில் பொருள்கள் இறக்குமதி செய்யும்வேலை மிகவும் ஜரூராக நடைபெற்று வருகிறது.

## தொழிற் சங்க ஆலோசகர்

இலங்கையில் உள்ள தொழிலாளர் சங்கங்களுக்கு ஆலோசனை கூறும் அதிகாரியாக மிஸ்ரர் ட்ரெவர் ஹல்ஸன் என்பவர் இப்போது நியமிக்கப்பட்டிருக்கிறூர் இவர் சென்றவாரம் இங்கிலாந்திலிருந்து வந்து தம் கடமையை எற்றூர்.

## காரைநகர் கருங்காலி சுப்பிரமணிய சுவாமி ஆலயம்

நிகழும் விய வருஷம் ஐப்பசி மாசம் உ௨ (18 10-46) வெள்ளிக்கிழமை இரவு ஆறு மணியளவில் ஷை ஆலயத்தை சைவாகம விதிகளின் பிரகாரம் சீரிய முறையில் நடத்துவதற்குரிய முறைகளைக் கையாளும் பொருட்டுச் சைவ அன்பர்களின் மகாகூட்டம் ஒன்று நடைபெற்றது.

ஆரம்பத்தில் மேற்படி ஆலய அத்தியட்சகராயிருந்து சென்ற 13-9-46-ல் சிவபதமடைந்த வேலுப்பிள்ளை உடையார் அவர்கள் நற்பேறு அடையவேண்டுமென்ற பக்தி சிரத்தையுடன் பிரார்த்தனை செய்யப்பெற்றது.

பின்னர் ஆலயத் தற்கால அத்தியட்சகர் ஆலயங்கள் நல்ல முறையில் நடத்தப்படவேண்டிய அவசியத்தை தப்பற்றியும், அதன்பொருட்டுக் காரைநகர்ச் சைவமகாசபையார் செய்துவரும் நன்முயற்சிகளைப் பற்றியும் எடுத்துரைத்துப் பிரதானமாகக் காலக்கிரமத்தில் நித்திய நைமித்தியங்கள் நடைபெறுதல் வேண்டுமென்றும் திருவுருவங்களைக் காட்சிக்கேற்ற முறையில் அலங்காரஞ் செய்தல், தாசிகள் நடனம் முதலிய வீண் ஆடம்பரக் கொண்டாட்டங்களை உடனே நிறுத்தப்படுதல் இன்றியமையாததென்பதை எடுத்துரைத்து அன்பர்கள் அதற்குத் துணைபுரிதல் வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொண்டனர். அதன்பின் பிரமஸ்ரீ ச. பஞ்சாக்ஷரக் குருக்கள் அவர்கள் ஆலயக்கிரமம் என்னும் பொருள்பற்றிச் சிறந்த உபந்நியாசஞ் செய்தார்கள். —கடித

## இலங்கையைப் பார்!

ஜனநாயக ஆட்சி முறையைத் தனது அரசாங்கம் இந்தியா, பர்மா, இலங்கை முதலாம் நாடுகளில் அமுல் நடத்தி உலக மக்களுக்குச் சுபீட்ச வாழ்வுக்கு வழிகாட்டியிருக்கிறதென்று பிரிட்டிஷ் பிரதமர் சென்றவாரம் நிகழ்த்திய பாராளுமன்றத்துக் கூட்டத்திற் கூறினர்.

## விளம்பரம்


### வட்டுக்கோட்டை சைவாங்கில வித்தியாசாலை

ஷை வித்தியாசாலைப் பழைய மாணவர் சங்கம் மார்கழி மாதம் 1946-ம் ஆண்டு நிறுவ நிச்சயித்திருப்பதால், பழைய மாணவர் எல்லோரும் தங்களுடைய பெயரையும், விலாசத்தையும் வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர்க்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

சே. சிவகுருநாதபிள்ளை
தலைமை ஆசிரியர்.

சை. ஆ. வி.
வட்டுக்கோட்டை
26—10—46.

Mis 205 29—5-11-46

### விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, துணைவியில் 2 நெல் வயல்களும் 5 வளவுகளும் விலைக்கிருக்கின்றன இவைபற்றிய விபரங்களையும், விலைகளையும் பின்வருவோரிடம் அறிந்துகொள்க.

Dr. C. Sivasithamparam
No. 27, 34th Lane
Wellawatte

Mis 200 29&5-11-46


## இன்னும் ஏழு மந்திரிகள்

ஜெர்மனியில் அதிகாரம் செலுத்தி இப்போது அமெரிக்கரால் சிறைப்படுத்தப்பட்டுள்ள 7 ஜெர்மன் மந்திரிகள், நியுறெம்பேர்க் நீதிஸ்தலத்தில் விசாரணை செய்யப்படுவர் என்று ஓர் அமெரிக்கச் செய்தி கூறுகிறது.

## பர்மா அரிசி

பர்மாவில் அடுத்த ஆண்டிலே 50 லட்சம் தொன் அரிசி விளைவிக்கப்படும் என்றும், அதில் 15 லட்சம்தொன் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதியாகலாம் என்றும் றங்கூன் செய்தி ஒன்று கூறுகிறது.

# திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### புதன் அக் 30

காலை 7.15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 சாரதா அனந்தராமன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வானெலி வாத்யகோஷ்டி 8.30 கே ஆர் ராமபத்திரன் பாட்டு 9 முடிவு.

1 சுதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே ஆர் ராமபத்திரன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கே ஆர் ராமபத்திரன் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 ஸி ஆர் மணி ஐயர் வயலின் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 புத்தக விமர்சனம் 8 சாரதா அனந்தராமன் பாட்டு 8.30 ஸி ஆர் மணி ஐயர் வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9 45 ஆங்கில நிகழ்ச்சி 10 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

### வியாழன் அக் 31

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 மாயவரம் கே என் டக்கிரிசாமி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 என் ஸி வசந்தகோகிலம் இசைத்தட்டு 8-30 ஜி பத்மினிபாய் வீணை 9 முடிவு.

1 சுதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 கே வி காந்தாமணிஐயர் வீணை 2 தமிழில் செய்திகள் 2-05 கே வி காந்தாமணி ஐயர் வீணை 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 கே வாசுதேவன் பாட்டு 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 மாயவரம் கே என் டக்கிரிசாமி பாட்டு 7-15 செய்தி விளக்கம் 7.30 தமிழில் செய்திகள் 7.45 மைலம் பி ஜெராவேலு மகலிங்கர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 தண்டனை நாடகம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 கே வாசுதேவன் பாட்டு 10.30 முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

நடேஜாய மங்களம்,

## விவாக சோபன விஞ்ஞாபனம்

### சிவகுருநாதன்—மகேஸ்வரி

சிவகாமசுந்தரி சமேத சிதம்பரேஸ்வர சுவாமி திருவருளை முன்னிட்டு, நிகழும் விய வருஷம் ஐப்பசி மாசம் 15-ந் திகதி (31-10-46) குரு வாரம் உதயாதி 53 நாளிகையில் (3 30 A. M.) வரும் சுப முகூர்த்தத்திலே வண்ணார்பண்ணை திரு சித மு. ப. சிதம்பரநாதச் செட்டியாரின் இரண்டாம் புத்திரன் செல்வச்சிரஞ்சீவி சிவகுருநாதன் (B. A.,) க்கு சர்ண பூஷணம் செய்து, நல்லூரில் வழக்கறிஞர் திரு C. T. குமாரசுவாமியின் ஏகபுத்திரி சௌபாக்கியவதி மகேஸ்வரியை விவாகம் செய்வதாகப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணங்களிலும், 1–11–46 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் வண்ணார்பண்ணையில் மணமகனில்லத்தில் நடைபெறும் கொண்டாட்டத்துக்கும், அன்றும் அடுத்த நாட்களிலும் நல்லூரில் மணமகளில்லத்தில் நடைபெறும் கொண்டாட்டங்கட்கும் சமுகம் செய்து தம்பதிகளை ஆசிர்வதிக்கும்வண்ணம் மணமக்களின் பெற்றோர் தங்கள் சுற்றமித்திரர்களை அன்போடு கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

சுபம்!

Mis 202 25, 29


# இந்திய அரசியல்

### லீகர்களின் உத்தரவாதம்

முஸ்லிம் லீக் இடைக்கால அரசாங்கத்திற் சேர்வது நன்மைக்கா தீமைக்கா என்ற ஓர் பெரும் கேள்வி இப்போது சிலகாலமாக எல்லாராலும் கிளப்பப்பட்டு வந்தது. தங்கள் வெருட்டுக்களும் ஜம்பங்களும் பலிக்காமையைக் கண்டுள்ள லீகர்கள், அரசாங்கத்துட் புகுந்துகொண்டே அல்லல் விளைப்பரோ என்று பலர் ஆசங்கித்தனர். இப்படியான தீய நோக்கத்துடன் தாம் வரவில்லை என்றும் நாட்டின்நன்மைக்குகந்தமுறையில் சகலருடனும் ஒத்துழைத்து அரசியலை நடாத்தவேண்டும் என்னும் பரந்த நல்ல நோக்கத்துடனேயே தாம் இடைக்கால அரசாங்கத்திற் சேருகிறார்கள் என்றும் லீகர்கள் இராஜப்பிரதிநிதிக்கும் காங்கிரசுக்கும் ஓர் உத்தரவாதம் கொடுத்துள்ளனர் என்று இப்போது தெரிகிறது.

* *

### மந்திரசபை மாற்றியமைப்பு

முஸ்லிம் லீக் இடைக்கால அரசாங்கத்திற் சேர்ந்துவிட்டதால், மந்திர சபை இப்போது மாற்றியமைக்கப் பட்டுவிட்டது. லீக் பிரதிநிதிகளான ஐவரும் பின்வரும் பதவிகளை ஏற்பர்:

நிதி: லியாகத் அலிகான்

வர்த்தகம்: ஐ. ஐ. சந்திரிகர்

போக்குவரத்து (தபால், ஆகாச விமானப் பகுதி) அப்துல் ருப் நிஷ்டர்

சுகாதாரம்: கஸ்னுபர் அலிகான்

சட்டம்: ஜோகேந்திரநாத் மண்டல்

முன்னர் நிதிமந்திரியா யிருந்த ஸ்ரீஜான் ஜோன் மத்தாய, கைத்தொழில், வினியோக மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். கைத்தொழில் மந்திரியாயிருந்த திரு ராஜகோபாலாச்சாரியார், கல்வி மந்திரியாகவும், தொழில்கள் சுரங்கம் முதலியவற்றுக்கு ஸ்ரீ ஸி. எச். பாபா மந்திரியாகவும் இப்போது நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏனைய மந்திரப்பதவிகளில் மாற்றங்கள் இல்லை

* *

### ஜின்னு கண்டிக்கிறார்

இன்று இந்தியாவிலே வகுப்புக் கலவரங்கள் நிகழ்வதற்கு மூலகாரணம் முஸ்லிம்லீக்கின் பொறுப்பற்ற விஷமத்தனமான கருமங்கள் என்பதை அகில உலகமும் அறியும். இப்படி எல்லாம் செய்துவிட்டு முஸ்லிம் லீக் தலைவரான மிஸ்டர் மகமதலி ஜின்னு இன்று சமாதானம் வேண்டுகிறார். முஸ்லிம் மக்களுக்கு ஓர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். "இந்துக்களும், முஸ்லிம்களும் ஒருவர் கழுத்தை ஒருவர்முறிக்கும் பாதகச் செயல்களை ஒழிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் இன்று உலகின்முன்னே மிகவும் சிறுமையுற்றவர்களாக விருக்கின்றோம். இதற்குக் காரணம் இந்த நாட்டில் நிகழும் வகுப்புக் கலவரங்களே. நமது அரசியல் எண்ணங்களும் அபிலாஷைகளும் எவ்வாறு இருந்தாலும் இரு வகுப்புத் தலைவர்களும் இவ்விதமான செயல்கள் சம்பவிக்கா வண்ணம் பார்த்துக்கொள்ளல் வேண்டும்" என்று ஜின்னு சாகிப் இப்போது கரைகின்றார். இந்தஉண்மையை முந்தியே தெரிந்திருந்தாலோ?

## அமெரிக்காவில் நேரு ஜயந்தி

பண்டித நேருவின் பிறந்ததினத்தை அமெரிக்காவில் கொண்டாட இந்திய சுதந்திர தேசீயசபையினர் திட்டம்போட்டிருக்கிறார்கள். நவம்பர்மாதம் 14ந் தேதியன்று பண்டிதநேருவின் பிறந்ததினத்தையொட்டி அங்கு ஒரு விருந்து நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு பல பிரபலஸ்தர்கள் அழைக்கப்படுவார்கள். அந்த விருந்தினர்களுக்கு பிரிட்டிஷ் ஒலிபரப்பு நிலையத்தின் மூலமாகவும் கொலம்பியா ஒலிபரப்பு நிலையத்தின் மூலமாகவும் டில்லியிலிருந்தே பண்டித நேரு ஒரு பிரசங்கஞ் செய்ய ஒழுங்குகள் செய்யப்படும். ட்ரு பியாஸன் உள்பட பல்பிரமுகர்களும் இக் கூட்டத்தில் பேசுவார்கள்.

## தேகவியோகம்

### ஸ்ரீ. கார்த்திகேசு

பழைய வீமன்காமம் உடையாராயிருந்த ஸ்ரீ குருநாத உடையாரின் பெருமகனும் நல்லூர் ஸ்ரீ வி. முத்துக்குமாரு எம் ஏ. அவர்களின்சிறியதந்தையாருமானஸ்ரீகா கார்த்திகேசு அவர்கள் சென்ற 21-10-46 திங்கட்கிழமை யன்று தேகவியோகமாயினர் என்பதறிந்து மிகவும் கவல்கின்றோம். இவர் தமது அந்தியகாலம் வரைக்கும் சைவாசார சீலராக ஒழுகி எவர்க்கும் இதமாக நடந்தவர். இவருடைய ஈமக்கிரியைகள் பன்னூற்றுக் கணக்கான சுற்றமித்திரர் [illegible] ஸ்ரீ வி. முத்துக்குமாரு [illegible] செய்யப்பட்டன. இவரது ஆன்மா சாந்தியடைக.

உ

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவவதாரப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க்கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

வளஞ்செறி யினைய பாலால் வான்சர வணமாம் பொய்கைத்
தளஞ்செறி பதும மொன்றிற் சராசரம் யாவுங் காப்பான்
உளஞ்செறி கருணை யெய்தி யொப்பிலாக் குமர மூர்த்தி
யிளஞ்சிறு மதலை போல வினிதுவீற் றிருந்தான் மன்னோ.

தமக்கு ஒப்பாரில்லாதவராகிய குமாரக் கடவுள், மேலே சொல்லப்பட்ட வளப்பம் மிகுந்த இயல்போடு, மகத்துவம் பொருந்திய சரவணவாவியின் கண்ணேயுள்ள இதழ் செறிந்த செந்தாமரைப் பூவில், அகில சராசரங்களையும் பாதுகாத்தற்பொருட்டு திருவுளத்தில் நிறைந்த கருணை பூண்டாராய் இளங்குழவிபோல இனிது எழுந்தருளி யிருந்தாரென்பது கருத்து

மேலே சொல்லப்பட்ட சிறப்புக்களெல்லாம் அமைய வென்பார், "வளஞ்செறி இனிய பாலால்" என்றார்; குழந்தைப் பெருமான் எழுந்தருளிய செந்தாமரைப்பூ அத் தடாகத்திலுள்ள ஏனைய பூக்களைக் காட்டிலுஞ் சிறந்ததாதலின் 'தளஞ்செறிபதும" எனப்பட்டது. தோற்றத்தில் இளஞ்சிறு மதலைபோல விருந்தனரெனினும், நோக்கத்தில் அகில சராசரங்கட்கும் அநுக்கிரகம் புரியும்வண்ணம் எழுந்தருளியிருந்தாரென்க.

[பரம்பொருளாகிய குமாரசுவாமியைப் பரிக்கும் விசிட்டம் பெற்றமையினல் "வான் சரவணம்" என்றார்; இளஞ்சிறு மதலைபோல என்றதனால் அவர் உள்ளபடி மதலையல்லரென்பது பெற்றாம்.] (113)

தீர்த்திகைக் கங்கை தன்னிற் றிகழ்சர வணத்தில் வந்த
மூர்த்திகைக் குழவி யேபோன் முதற்புரி யாட லேக்கி
யார்த்திகை யுறுத வுள்ளத் தரிமுத லமரர் யாருங்
கார்த்திகைத் தெரிவை மாரை விளித்திவை கழற லுற்றார்.

துயரினையடையாத மனத்தோடு கூடிய திருமால் முதலிய தேவரனைவரும் சிறந்த தீர்த்தமாகவுள்ள கங்கையினின்றும் போந்து சிறப்புறவிளங்குகின்ற சரவணவாவியிற் சேர்ந்து எழுந்தருளிய குமரமூர்த்தி கைக்குழந்தை போன்ற தோற்றத்தோடு முதன்முதற் செய்துள்ள திருவிளையாடலை அவதானித்து, கார்த்திகைப்பெண்கள் அறுவரையும் அழைத்துப் பின்வருவனவற்றைச் சொல்வாராயினர் என்பது கருத்து.

"மூர்த்தி கைக் குழவியேபோல்" எனப் பிரிக்க; முருகப்பெருமான் பின்னர்ப் பல திருவிளையாடல்களைச் செய்தருளுவராதலின் இங்கே "முதற் புரியாடல்" என்றார்; ஆர்த்தியுறுத உள்ளமென்பது துன்பம் (அப்பொழுது) அகன்றுள்ள மனத்தையுடைய என்பதைக் குறித்தது. சூரபன்மன் செய்யுந் துயராற் கவன்ற தேவர்கள், சுப்பிரமணியப் பெருமான் திருவவதாரஞ் செய்த மாத்திரத்தே தம் கவலை நீங்கப்பெற்றாராதலினென்க.

[தீர்த்திகை-தீர்த்தம்; தீர்த்திகைக் கங்கையென்பதில் தீர்த்தி உமாதேவி, தீர்த்தனுடையதேவி; கங்கைதன்னில்என்றதில் இல் நீக்கப்பொருளில் வந்தது; இதனை உம்மைத் தொகையாகக் கொள்ளுதல் சிறப்பின்றாம்; ஆர்த்திகா என்னும் வடமொழி தமிழில் ஆர்த்திகையெனத் தற்பவமாயிற்று; வருத்தமென்பது பொருள்.] (114)

சாற்றருஞ் சரவ ணத்திற் சண்முகத் தொருவ னாகி
வீற்றிருந் தருளு கின்ற விமலனோர் குழவி போலத்
தோற்றின னவனுக் குங்க டுணைமுலை யமுத மூட்டிப்
போற்றுதிர் நாளு மென்ன நன்றெனப் புகன்று போனார்.

சொல்லுதற்கரிய மகத்துவத்தோடு கூடிய சரவணவாவியின் கண்ணே அறுதிருமுகங்களைக் கொண்டவராகி எழுந்தருளியுள்ள அந்தநிர்மலமூர்த்தி ஒரு சிறு குழந்தைபோலப் புலப்படுகின்றார்; அக்குழந்தைக்கு உங்களிருதனங்களிலும் பொருந்திய அமுதத்தை நாள்தோறும் அருத்தி அக்குழந்தையைப் பேணுவீர்களாக என்று (தேவர்கள் சொல்ல), அப்படியே செய்கின்றோம் எனச் சொல்லிச் சரவணவாவியை யடைந்தனர் (கார்த்திகைப் பெண்கள்) என்பது கருத்து

உண்மையில் விமலனாயினும் எங்கள் கண்ணுக்குச் சிறுகுழந்தைபோற் புலப்படுகின்றானென்பார் "குழவிபோலத் தோற்றினன்" என்றார்.

காத்தல், துதித்தல், புகழ்தல், பேணுதல், வணங்குதல், வளர்த்தல் என்னும் பல பொருள் குறித்த ஒரு சொல்லாகிய போற்று என்பதனை இங்கே பெய்து பாடியமை ஆசாரிய சுவாமிகளின் கவிநுட்பமென்க; இந்த இடத்தில் மேலே சொல்லப்பட்ட பொருள்களனைத்தும் கார்த்திகை மகளிர் இச் சேய்க்குச் செய்யற்பாலனவாம். (115)


# இந்துசாதனம்

## ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

### பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். | வெளியூர். | மலாய்நாட்டுக்கு. |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆூ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும், தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறப்பர்.

Y 12 20-11-45—20-11-46 (தி)


## கற்பனை கடந்த சோதி

1-ம் பக்கத் தொடர்ச்சி

கூறுகின்றார். காட்சிப் பொருள் பொருள் ஒன்றானும் கொள்வாருள்ளத்தால் இருபாற் சுவை பட்டது. இதனை, நுணுகியாராய்ந்தே எண்வகைச் சுவை வகுத்தனர். அவற்றுள் நகை, மருட்கை, பெருமிதம், உவகையென்னும் நான்கும் இன்ப அனுபவத்தினுள்ளும், அழுகை, இழிவரல், அச்சம், வெகுளியாகிய நான்குந் துன்ப அனுபவத்துள்ளும் சேர்க்கப்படலாம். ஒன்பது சுவையுள் ஏனை நடுவுநிலை இன்பமுந் துன்பமும் இல்லா அருங் கற்பனையாளர் நிலையெனவடங்கும். இன்ப துன்ப சமரசம் நோக்கும் அறிவினர் ஞானநிலை என்னினுமாம். இன்பதுன்ப அனுபவ உணர்வுகளிரண்டும் கற்பனை வல்லார் தாம் அனுபவித்து உலகுக்குதவிய இலக்கியக் கருவூலங்களிலே யாம் காணுதல் இயையும். இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டு இன்னும் நன்கு தெளிவிக்கும்:—

### இன்பக் கற்பனை

அலையெறிந்து குமிறும் கடற்கரையில் இருபுலவர் காட்சி காணச்சென்று தத்தமக்குகந்த விடங்களில் அமர்ந்தனர். நாற்றிசையிலும் தோற்றும் காட்சிகள் அவர்கள் உள்ளத்துள்ள உணர்வூற்றைத் திறக்கலாயின. உணர்ச்சிப் பெருக்கு எழுத்தாணி நுனியில் இருந்து, ஏட்டுச் சட்டத்துட் பாய்கின்றது. அவர்கள் எழுதிமுடிந்தபின் இருவகை ஏடுகளையுமெடுத்து அவற்றை யொப்பிடவேண்டி நேர்ந்தது. காரணம் என்னவெனில் இருபுலவோரகத்துச் சுவை வேறுபாடு முகத்துத் தோற்றுவதாயிற்று. இருவேறு பாதைகளில் ஓடிய உணர்வு முடிவில் ஒன்றுபட்டுச் சந்தித்தது. இதுவே பெரும் வியப்பு! ஓர் காட்சி இரு கொள்கைகளை யெழுப்பி ஈற்றில் ஒருபயனைத் தருமாயின் யார்தான் வியக்கமாட்டார். விரிவினை அறியக் கூறுவாம்.

ஒருமேதை மலர்ந்தமுகமும் நகை தவழ்ந்த வாயும் பெருமிதவுள்ளமும் மருண்ட நோக்குங் கொண்டு தோற்றினர். அவரது ஏட்டில்பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது. புயலுக்குப் பின் அமைதியென்பது எவ்வளவு பொருத்தமானது. ஆகா! அலையெறிந்து கொந்தளித்த கடல் மௌன நிலையை அதனுள் அடைந்துவிட்டது. இறைவ! உலகப் பாசத்தினுல் தாக்கப்படுவார் இன்பதுன்ப அலையடிக்க அல்லல் உறுவதும், உலகப்பற்றொழிந்தார் இன்பதுன்பம் ஒழிந்து நின் பாத நீழலில் அமைதியுடன் அமர்ந்து பற்றொழிந்து அதனுல் ஓடும் செம்பொன்னு மொப்பநோக்கி மனத்தின் செயலேயற்று மலபந்தங்களின் றுக்கம் ஒழிந்து சமாதி கூடி வாழ்வார்கள் என்பதனை நிதர்சனமாகவன்றோ காட்டுகின்றது. அதோ அயலிலிருக்கும் சிறு குட்டை சிறு வாய்க்கால் நீர் தன்னுள் விழுவதால் வரை மீறிக் கரை புடைத்துப் பாய்கின்றதே. ஆனல் இக்கடலோ இந்து, கங்கை, சரஸ்வதிமுதலிய தெய்வநதிகள் தன்னுட் பாயவும் தன்னிலையிற் றிரியாது காட்சியளிக்கின்றது. இஃது சிற்றறிவுடையோர் கொந்தளிப்பா ரென்பதையும் பரம ஞானிகள் நிலம் பெயரினும் மனத்தின் நிலைபெயரார் என்பதனையும்தெளிவிக்கின்றதன்றோ? அந்தோ! அடிவானத்தொடு வரை தெரிகின்றதே. அஃது அண்மைபோலவே தோற்றுகிறது. சென்றுலதனைப் பிடிக்கலாம்போலவும் தோற்றுகின்றது. ஆனற் பிடித்தவரோ வொருவருமில்லை. இஃது முற்றறிவன் நிலையினைக் காட்சியளவையையேகொண்டுகாணுதல்ாலும் என்று கூறிம் உலோகாயதர் கொள்கையில் மயக்கத்தில் ஏமாந்துவிடாதீர் என்பதை விளக்குகிறதன்றோ? கடல் அமைதியுடைத்தாகத் தோற்றினும் அதன் ஒலி காதில் ஒலிக்கிறது. அந்த ஒலி நாத விந்துக்கள் ஆதியாய இறைவரது ஓங்கார ஒலி போலவன்றோ கேட்கிறது: இவைகள் யாவற்றையும் கூர்ந்து நோக்கினல் இறைவன் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு மறைந்து புறம்புறம் திரிந்து உலகநிலையை அழிவுபடும் எனக் காட்டி தன்னிலையையுங் காட்டி தன் நீழலை அடையச் செய்தற்கு ஊனென்றும் உடலென்றும் கரணமென்றும், உள்ளென்றும் புறமென்றும் ஒளியாய் நின்ற வானென்றும், காலென்றும் தீ நீரென்றும் மண்ணென்றும் மலையென்றும், வனமென்றும் உலகைத் தோற்றுவித்து அவற்றின் நிலையின்மையும், இறைவன் செயலை உணரும் ஞானத்தைப் புகட்டினர் என்பதும் தெளிவாகிறது" எனப் [illegible]ந்தது.

(வரும்)

## ஜெர்மனியில் அமெரிக்கர் கொலை

ஜெர்மனியிலே ருஷியர் அதிகாரத்திலுள்ள பெர்லின் நகரத்திலே, முனிசிப்பல் தேர்தல் காட்சிகளைப் படம் பிடித்துக்கொண்டிருந்த ஓர் அமெரிக்கரை ருஷிய பொலிஸ்காரன் ஒருவன் சென்றவாரம் சுட்டுக்கொன்றான என்று தெரிகிறது. அமெரிக்கர் படம்பிடிப்பதை அவதானித்த ருஷிய பொலிஸ்காரன் அவரைத் தனக்குப பின்னல் வரும்படி கூற, அவர் மறுத்ததால் இப்படிச் சுட்டான் என்றும், சுடப்பட்டவர் ஓர் உயர்தர அமெரிக்க அதிகாரி. என்றும் சொல்லப்படுகிறது.


# பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவ, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேகபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)



# ஜீவாதார வைத்திய விளம்பரம்

மானிடர்க்குப் பெருஞ் செல்வமாகக் கிடைத்த சஞ்சீவி வைத்தியம்

ஒருமனதுடன் வந்து நற்சுகத்தைப் பெறுங்கள்

பித்தம், மேகச்சூடு, சலரோகம், இருமல், தொய்வு ஏனைய காய்ச்சல் ரோகங்களும் மருந்து அருந்திய நேரந் தொடங்கி வருத்தம் காண்பியாது நற்பலனைக் கொடுக்கும். எந்த ரோகிகளும் தாகள் இரத்தம் சுத்தமாகும் வரை மருந்து அருந்திவரவேணும்.

இங்ஙனம்,
க. த. அப்பாத்துரை.
சுதேசவைத்தியர்
தாவடி வடக்கு, கொக்குவில்.

(Mis 160 30-8—30-11-46)

## நற்சாட்சிப் பத்திரங்கள்

ஜீவாதார வைத்தியசாலையில் நமது மனைவி (Hysteria) வாய்வுக்கு, தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரைப்பிள்ளையிடம் 3 வேளை மருந்து சாப்பிட்டபின் பூரண சுகமடைந்ததை இத்தால் சகலருக்கும் அறிவிக்கிறேன்.

இங்ஙனம்,
த. சின்னத்துரை,
தாவடி.

ஜீவாதார வைத்தியசாலையில் தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரை அவர்களின் மருந்துகளை இரண்டுநேரம் உட்கொண்டதினல், நாலு வருஷ காலமாகக் கஷ்டப்பட்டிருந்த தொய்வு வியாதியால் மீளப்பெற்று மூன்று மாதத்தின் பின் இதை வெளியாக்குகிறேன்.

இங்ஙனம்,
லோறன்ஸ் மிக்கேல்,
கரையூர்.

(Mis 195 22 10 to 21-1-47)


## மகாத்மாவின் புதல்வர் சிறை

தென்னபிரிக்காவில் நிகழும் இந்திய மக்களின் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் மகாத்மா காந்தியடிகளின் புதல்வரான ஸ்ரீ ஜுத் மணிலால் காந்தி சிறையாக்கப்பட்டார். அவர்க்கு ஒரு மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.


வெற்றியைப் பின்தொடர்ந்து இதோ வந்துவிட்டோம்

# அஜ்மீர் ஜெனரல் அஷூரன்ஸ்

## வீமாக்கொம்பனி லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1907

எாது அதிசய சேவையின் அற்புத வெற்றி

| | | |
|---|---|---|
| இப்போதுள்ள பொலிசிகள் ரூபா | 700,00,000—00 | மேற்பட்டது |
| இதுவரை கொடுபட்டதொகை ரூ | 113,00,000—00 | ,, |
| இப்போதைய இருப்பு ரூபா | 170,00,000—00 | ,, |
| 1944ம் ஆூ வருஷாந்த வருமானம் | 39,45,103—00 | ,, |

ஆயுள், அக்கினி, தொழிலாளர் நஷ்டஇடு, விபத்து முதலியவற்றிற்கு இன்ஷூர் செய்யப்படும்

எவருக்கும் தகுதியான குறைந்த கட்டணப் பணம் உடையது

இலங்கையில் சகலபாகங்களிலும் ஏஜென்ஸ் தேவை

நல்ல சம்பளமும் உத்தியோக நிலைபரமும் கொடுக்கப்படும்

விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

கிளைக் காரியதரிசி, **டொன் கரலிஸ் கட்டிடம்,**
91, முதலாம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.

Mis 154 29-11-45—30-11(தி)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday, October, 29, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org